பட்டிருக்கிறது. இதன் முன்னோடி ஆய்விலே ஒரு புதிய முறையைச் சேர்த்திருக்கிறோம். காரணம் இன்னொரு ஆய்வு செய்வதைத் தவிர்ப்பதற்காக அந்த அடிப்படையில் அதை எடுத்துக் கொள்கின்ற வாய்ப்புகள் நிரம்ப இருக்கின்றன என்றுதான் கருதுகிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய பயனைப் பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதையும், மதிப்பீடு எவ்வளவு ஆகும் என்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முன்னோடி ஆய்விலேயே, முடிந்த ஆய்வாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 8 கோடியே 11 லட்சம் செலவாகும் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கின்றது விரிவான அறிக்கையைப் பெற்று நிச்சயமாக அதை எடுத்துக் கொள்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் பொதுவாகவே ஆய்வு செய்கின்ற காலங்களிலே 3 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையில் நீடித்துக் கொண்டே போகிறார்கள். இந்த ஆய்வு செய்யும் காலத்தினைக் குறைத்து உடனடியாக செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மேற்பரப்பு நீரை, சர்பேஸ் வாட்டர், நாம் அதிகமாகவே பயன்படுத்தி வருகிறோம். எனவே அணைகளைக் கட்டுகின்றபோது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனுடைய நீர் வரத்தை நீரியல் அடிப்படையிலே கணக்கிடக் கடமைப் பட்டிருக்கிறோம். அதனால் சில பகுதிகளில் 3 ஆண்டுகள்—அதற்கு மேலும் ஆகின்றது. கூடுதலாக எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதைப் பார்த்த பிறகு, மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள், என்று ஆகின்றன. இப்போது அம்பாசமுத்திரம் வட்டம் பாபனாசம் அருகில் கோரையாற்றின் குறுக்கே ஒரு அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை வந்தபோது, அது முதல் நிலை ஆய்வாக இருந்தாலும்கூட, முடிந்த பணியாக அதை மனதிலே கொண்டு செயல்பட வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை மூலமாக அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 3 ஆண்டுகளில் முடிய வேண்டிய இந்த வேலையை 6 மாதங்களுக்குள்ளாகவே இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே முடித்திருக்கிறார்கள். இடத்தைப் பொறுத்தும் சூழ்நிலையைப் பொறுத்தும் அரசு அவ்வப்போது விரைவான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

1983 பிப்ரவரி 7]

மதுரை மாவட்டத்தின் புதிய நூற்பாலைகள் தொடங்க 1980-81-ல் வழங்கப்பட்டுள்ள அனுமதிகள்.

*வினா எண். 134—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் புதிதாக நூற்பாலை தொடங்க 1980-81-ல் யார், யாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, விவரங்கள் அடங்கிய அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அதோடு, பருத்தி பயிரிடுவதற்காக 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை ஒன்றை தேனிப்பகுதியிலே ஏற்படுத்துவதற்கு பணி நடைபெற்று வருகின்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 32 ஆலைகள் தொடங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இருக்கின்றன. இந்த 32 ஆலைகளிலே ஏதாவது ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றனவா? அப்படித் தொடங்கப்பட்டால் அவற்றிலிருந்து உற்பத்தியாகும் நூல் அளவைப் பற்றிய விவரம் ஏதாவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 1980—81 ஆண்டிலே உரிமங்கள் பெற்றிருக்கிறார்கள். இதிலே எந்த நூற்பாலையும் உற்பத்தியைத் தொடங்கியதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த நேரத்திலே நூற்பாலைகளிலே அதிகமான லாபம் இருந்த போது பல பேர் மனுச் செய்து உரிமம் பெற்றார்கள். சில பேர்கள் இப்போதுதான் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமதி பெற்ற 32 ஆலைகளில் ஏறத்தாழ முக்கால் பங்கு ஆலைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அதாவது திண்டுக்கல், வேடசந்தூர் பகுதியிலே துவங்கவிருக்கின்றன. அதைப் பற்றிக் கூட வருத்தமில்லை. ஆனால் அதிகமாக பருத்தி விளையக்கூடிய திருமங்கலம், உசிலை பகுதிகளிலே இப்படிப்பட்ட ஆலைகளைப் புதிதாகத் துவங்க அரசு முயற்சி எடுக்குமா ?

---

616—621ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.